செ.வெ.எண்: 9 நாள்:05.07.2016

# பத்திரிகைச் செய்தி

ரமலான் திருநாள் ஓர் ஈகைத் திருநாள். தினமும் ஐந்து முறை இறை வழிபாடு மேற்கொள்ளும் இஸ்லாமியப் பெருமக்கள், ரமலான் மாதத்தில் நோன்புடன் கூடிய இறை வழிபாட்டை மேற்கொள்கின்றனர். மனித வாழ்க்கையில் அகமும், புறமும் தூய்மையடைவதற்கான ஒரு பயிற்சி தான் நோன்பு. நோன்பிருத்தல் மூலம் இறைப் பற்று அதிகமாகிறது. ஈகைக் குணம் மேலோங்குகிறது.

"ஈகைத் தன்மையும், குன்றாத புகழும் தவிர வாழ்க்கைக்கு ஆக்கமும், ஊக்கமும் தரக்கூடியது ஏதுமில்லை" என ஈகையின் மகத்துவத்தை எடுத்துரைத்து இருக்கிறர் வள்ளுவப் பெருந்தகை.

இறைவனால் அனுப்பப்பட்ட இறைத் தூதர் நபிகள் பெருமகனார் அவர்கள் துன்பத்தை தனதாக்கிக் கொண்டு, இன்பத்தை மட்டுமே பிறருக்கு பகிர்ந்து கொடுத்து பரவசப்பட்டவர்கள். இதற்குக் காரணம் அவரது அன்பும், ஈகையும், கருணையும் தான்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏழை எளிய மக்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக இஸ்லாமிய மக்கள் வாழ்க்கை மேம்படும் வகையில் பல்வேறு திட்டங்களை வகுத்து அதனை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் மூலம் திரட்டப்பட்ட நன்கொடைக்கு ஈடாக அரசு வழங்கும் தொகையை இரண்டு மடங்காக உயர்த்தி உள்ளது. ஆதரவற்ற விதவை ஏழை மற்றும் வயதான இஸ்லாமியப் பெண்கள் உதவிச் சங்கங்களை அமைத்து ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ.20 லட்சம் வரை இணை மானியம் வழங்கி வருகிறது. உருது மொழியை உரு மொழிப் பாடமாகப் பயின்று 10 மற்றும் 12 ஆம்வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ மாணவியருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையை உயர்த்தியுள்ளது.

மேலும் நமது மாவட்டத்தில் ஆண்டுதோறும் ரம்ஜான் நோம்பு கஞ்சி தயாரிக்க அனுமதி வழங்கப்பட்ட பள்ளி வாசல்களுக்கு 1 கிலோ ஒரு ரூபாய் என்ற விலையில் பச்சரிசி அரிசி மற்றும் புழுங்கல் அரிசி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கிடங்கிலிருந்து பெறப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் தமிழக அரசு 82 பள்ளி வாசல்களுக்கு 106180 கிலோ (106.18 மெ.டன்) அரிசி ரம்ஜான் நோன்பு கஞ்சி தயாரிக்க வழங்கப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**